**வாக்குமூலம்–வழக்கு சாட்சி**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 3, திருப்பத்தூர்**

**வழக்கு எண் C.C. No. 136/2024**

2025ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 01 ம் நாள் வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 7 வது நபரின் வாக்குமுலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திருமதி. மீனா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ஜெயசீலன் | தொழில் | : | கார்பெண்டர் |
| தந்தை/கணவர் பெயர் | : | திரு. பிரகாசம் | ஜாதி | : | |
| ஊர் | : | கொங்கியூர் | சமயம் | : | |
| மாவட்டம் | : | திருப்பத்தூர் | வயது | : | 46 |

| | |
|---|---|
| எதிரி ஆஜர் | 1 |

**தேதி:** 01.08.2025

**அ.சா. 4 : முதல் விசாரணை**

நான் தற்போது ஆலங்காயம் அருகே உள்ள கொங்கியூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். கார்பெண்டர் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி ஆலங்காயம் அரசு துவக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியராக இருந்தார். எனவே அவரை எனக்கு தெரியும். கடந்த 05.10.2023 க்கு சுமார் 10 நாட்களுக்கு முன்பாக எங்கள் பகுதியில் வார்டு உறுப்பினர் திரு. ரத்தினவேலு என்பவர் மேற்கண்ட பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் சங்க உறுப்பினராகவும் இருப்பவர் எனக்கு போன் செய்து பள்ளியில் மரங்கள் இருப்பதாகவும் அதனை வெட்ட வேண்டும் என்றும் சொன்னார். அதன்படி நான் ரத்தினவேலு மற்றும் ஆஜர் எதிரி இருவரிடமும் மரங்களுக்கான விலையை கேட்டேன் அவர்கள் ரூ. 2 லட்சத்திற்கும் அதிகமான அளவில் அதிகப்படுத்தி விலை சொன்னார்கள். எனவே எனக்கு கட்டுபடி ஆகாது என்று வந்து விட்டேன். அதன் பிறகு மற்றொரு வார்டு கவுன்சிலர் சக்கரவர்த்தி என்பவர் எனக்கு போன் செய்து ரூ. 1,85,000/- க்கு விலை பேசி முடித்து தருகிறேன் வா என்று சொன்னதால் நான் பள்ளிக்கு சென்றேன். அப்போது ஆஜர் எதிரி மற்றும் கவுன்சிலர்கள் ரத்தினவேலு, சக்கரவர்த்தி ஆகியோர் இருந்தார்கள். நான் ரூ. 5000/- முன்பணமாக ஆஜர் எதிரியிடம் கொடுத்தேன். அதன் பிறகு பள்ளிக்கு ஒரு வாரம்

விடுமுறை வந்தது. அந்த சமயத்தில் முழுமையாக மரத்தை வெட்டிவிடவேண்டும் என்று சொன்னார்கள். நான் அந்த சமயத்தில் சென்று பள்ளியில் இருந்த காய்ந்து போன தேக்கு மரங்களை முதலில் வெட்டி எடுத்தேன். நான் அவ்வாறு வெட்டியபோது கவுன்சிலர்கள் ரத்தினவேலு, சக்கரவர்த்தி மற்றும் நிறைபேர் இருந்தார்கள். ஒவ்வொரு முறை நான் பள்ளிக்கு செல்லும் போதும் கவுன்சிலர் ரத்தினவேலு எனக்கு போன் செய்து வரவழைப்பார். நான் பள்ளிக்கு சென்று அங்கு பணியில் இருந்த புவனா ஆசிரியையின் வீட்டிற்கு சென்று சாவியை வாங்கி வருவேன். கவுன்சிலர் ரத்தினவேலு அவருக்கும் தகவல் சொல்லிவிடுவார். பள்ளியில் முதலில் காய்ந்து போன மரங்களை வெட்டி எடுத்தோம். மொத்தமாக 17 மரங்கள் வெட்டினோம். அதில் 12 மரங்கள் காய்ந்த பட்டுபோன மரங்கள், 5 மரங்கள் பச்சை மரங்கள் வெட்டினோம். அதன் பிறகு அரசியல் கட்சியை சேர்ந்த சில நபர்கள் வந்து மரம் வெட்டுவதில் பிரச்சனை உள்ளது என்று கூறியதால் நான் வெட்டுவதை நிறுத்திவிட்டேன். முன்பணம் ரூ. 5000/- மட்டும் தான் நான் செலுத்தியிருந்தேன். அதன் பிறகு பணம் எதுவும் நான் செலுத்தவில்லை. பிரச்சனை ஏற்பட்டதால் நான் பணத்தை செலுத்தவில்லை. நான் பள்ளியில் மரத்தை வெட்டி ஒரு லோடு மரத்தை மட்டும் என்னுடைய பட்டறைக்கு கொண்டுவந்துவிட்டேன். இந்நிலையில் வனத்துறையினர் வந்து அந்த மரங்களை நான் உரிய அனுமதி இல்லாமல் வெட்டியதாக கூறி அதனை எடைபோட்டு கைப்பற்றி எடுத்து சென்று விட்டார்கள். மேலும், எனக்கு ரூ. 10,000/- அபராதம் விதித்து ரசீது வழங்கினார்கள். நான் ஆஜர் எதிரியிடம் மரங்களை வெட்டுவதற்கு அனுமதி பெற்றுள்ளீர்களா என்று முதலிலேயே கேட்டேன். ஏற்கனவே ஊராட்சி ஒன்றித்தில் முறையாக தீர்மானம் நிறைவேற்றி தீர்மான பதிவேட்டில் குறிப்பிடபட்டிருப்பதாக கூறினார். நான் பள்ளியில் மரம் வெட்டுவதற்கு முன்பாக கவுன்சிலர்கள் சக்கரவர்த்தி மற்றும் ரத்தினவேலு ஆகியோர் ஆஜர் எதிரியுடன் எங்கள் ஊரில் வசிக்கும் ஓய்வு பெற்ற வன அலுவலர் வேலாயுதம் என்பவரிடம் அடிக்கடி சென்று மரம் வெட்டுதல் சம்மந்தமாக ஆலோசனை பெற்று வந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

என்னை போலீசார் விசாரித்த தேதி குறிப்பிட்டு எனக்கு நினைவில்லை. போலீசுார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். போலீசார் என்னை விசாரித்தபோது ஆலங்காயம் வனச்சரக அலுவலகத்தில் ரூ. 10 ஆயிரம் அபராதம் செலுத்திய விவரத்தை நான் தெரிவித்தேனா என்றால் அதன் பின்பு தான் அபராதம் செலுத்தியதால் தெரிவிக்கவில்லை. அபராதம் செலுத்திய பின்பு அந்த விவரத்தை போலீசாரிடம் நான் தெரிவித்தேன். போலீசார் என் கடையில் மரங்களை கைப்பற்றிய போது வேறு மரங்களை கைப்பற்றினார்கள் என்றால் இல்லை வழக்கு சொத்து அவர்களை மட்டுமே கைப்பற்றினார்கள். நான் தச்சர் தொழில் செய்து வருவதால் சில மரத்துண்டுகளும் அங்கு இருந்தது என்றால் சரிதான். நான் தச்சர் தொழில் செய்வதற்கு அனுமதி பெற்றுள்ளேனா என்றால் இல்லை. நான் மரம் வெட்டுவதற்கு வனச்சரக அலுவலகத்தில் உரிமம் பெற்றுள்ளேன் என்றால் இல்லை.ஆனால் நான் தச்சர் தொழில் செய்வதற்கு உரிமம் பெற்றுள்ளேன்.அந்த உரிமத்தை புலன் விசாரணை அதிகாரியிடம் கொடுத்தேன் என்றால் சரிதான். ரத்தினவேல் மற்றும் சக்கரவர்த்தி ஆகியோர் அழைத்ததன் பேரில் தான் நான் மரம் வெட்ட சென்றேன் என்றால் சரிதான் ஆனால் சக்கரவர்த்தி கடைசியாக தான் வந்தார். ஓய்வு பெற்ற வழக்கறிஞர் திரு வேலாயுதம் என்பவரிடம் என்னை வைத்து தான் ஆலோசனை பெற்றார்கள் என்றால் சரிதான். அப்போது எதிரியும் ரத்தினவேல் என்பவர் மட்டும் இருந்தார்கள் சக்கரவர்த்தி அங்கு இல்லை. ரத்தினவேல் மற்றும் சக்கரவர்த்தி ஆகியோர்தான் என்னை முன்பணம் செலுத்த சொன்னார்கள் என்றாலும் சரிதான். மரங்கள் பட்டுப்போன விவரத்தை எதிரி வட்டார வளர்ச்சி அலுவலரிடம் தெரிவித்ததாக என்னிடம் கூறினார் என்றால் சரிதான். வட்டார வளர்ச்சி அலுவலர் தான் அந்த மரங்களை ஏலம் விட வேண்டும் என்ற விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் நான் ரத்தினவேல் மற்றும் சக்கரவர்த்தி ஆகியோரிடம் சேர்ந்து கொண்டு எதிரிகள் தெரியாமல் மரங்களை திருடி விட்டேன் என்றால் சரியல்ல. ரத்தினவேல் மற்றும் சக்கரவர்த்தி ஆகியோர் தெரிவித்ததன் பெயரில் தான் ஆசிரியர் புவனா என்பவர் பள்ளியின் சாவியை என்னிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. ரத்தினவேல் தெரிவித்ததன் பேரில் தான் கொடுத்தார். சம்பவ சமயத்தில் பள்ளி விடுமுறை காலம் என்பதால் எதிரிக்கு தெரியாமல் நாங்கள் தான் ரத்தினவேல் மற்றும் சக்கரவர்த்தி

உதவியுடன் திருடி சென்று விட்டோம் என்றால் சரியல்ல.எதிரியிடம் நான் மரங்களுக்கு பேரம் பேசவில்லை என்றாலும் எதிர் கண்ட விவரங்கள் தெரியாது என்றாலும் சரியல்ல. பள்ளியில் நான் அத்துமீறி நுழைந்து மரங்களை திருடியதன் காரணமாக தான் வன துறையினர் எனக்கு அபராதம் விதித்தார்கள் என்றால் சரியல்ல. எதிர்க்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சிமளிக்கிறேன் என்றாலும் சரி அல்ல.

| |
|---|
| Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.<br><br>Signature of Witness                    Judicial Magistrate No.III(FAC)<br>Tirupathur. |